# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


தூய ஆவியால் இயேசு பாலைநிலத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார். பாலைநிலத்தில் அவர் நாற்பது நாள் இருந்தார்; அப்போது சாத்தானால் சோதிக்கப்பட்டார்; அங்குக் காட்டு விலங்குகளிடையே இருந்தார். வானதூதர் அவருக்குப் பணிவிடை செய்தனர். யோவான் கைதுசெய்யப்பட்டபின், கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக்கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். “காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்று அவர் கூறினார். (மாற்கு 1: 12-15

# வத்திக்கான் வானொலியின் 90-வது ஆண்டு நிறைவு

## -திருத்தந்தையின் வாழ்த்து

**வத்திக்கான்**: கடந்த பிப்ரவரி 12, வெள்ளியன்று, வத்திக்கான் வானொலி, தன் பணியில், 90 ஆண்டுகளை நிறைவு செய்வதையொட்டி, இவ்வானொலியின் முன்னாள் இயக்குனராகப் பணியாற்றிய இயேசு சபை அருள்பணி பெதரிக்கோ லொம்பார்தி (Federico Lombardi) அவர்கள், லா சிவில்த்தா கத்தோலிக்கா என்ற இதழில் சிறப்பு கட்டுரையொன்றை வெளியிட்டுள்ளார். வானொலி என்ற வியத்தகு அறிவியல் கண்டுபிடிப்பை உருவாக்கிய குக்லில்மோ மாரக்கோணி அவர்கள், 90 ஆண்டுகளுக்கு முன், திருத்தந்தை 11-ஆம் பயஸ் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, வத்திக்கான் வானொலியை உருவாக்கி, அதை, இயேசு சபை அருள்பணியாளர் கியூசெப்பே கியான்பிரான்ஸ்சி அவர்களிடம் ஒப்படைத்தார். வத்திக்கான் அரசு உருவாகி வந்த வேளையில், அந்த அரசின் கருத்துக்களை உலகறியச் செய்வதற்கு, 1931-ஆம் ஆண்டு வத்திக்கான் வானொலி நிறுவப்பட்டபோது, அன்றைய காலக்கட்டத்தில், இந்த நிலையம், அறிவியலில் முன்னணி இடத்தை வகித்தது. 1930-களில் பல்வேறு உலக அரசுகள், தங்கள் அரசியல் நிலைப்பாட்டை மக்கள் மீது திணிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வந்தவேளையில், உண்மையை எடுத்துரைக்கும் நோக்கத்துடன் திருத்தந்தை 9-ஆம் பயஸ் அவர்கள் வானொலியைத் துவக்கியது, உண்மையிலேயே துணிவு நிறைந்த ஒரு முடிவு என்பதை, அருள்பணி லொம்பார்தி அவர்கள் தன் கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். வானொலியின் முதல் இயக்குனர் இயேசு சபை அருள்பணி




Gianfranceschi அவர்களுக்குப்பின் பொறுப்பேற்ற இயேசு சபை அருள்பணி Filippo Soccorsi அவர்கள், 1936-ஆம் ஆண்டு, இந்த வானொலியை அனைத்துலக வானொலி கழகத்தின் ஓர் உறுப்பினராக இணைத்ததுடன், பல்வேறு நாடுகளின் இயேசு சபை அருள்பணியாளர்கள், இந்த வானொலியில் பணியாற்ற வழிவகுத்தார். இரண்டாம் உலகப் போர் மூண்டுவந்த 1939-ஆம் ஆண்டில், இத்தாலியம், பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன், ஸ்பானியம், போர்த்துகீசியம், போலந்து, உக்ரைன், லித்துவேனியா ஆகிய மொழிகளில் ஒலிபரப்பு நடைபெற்றது. இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்து வந்த வேளையில், பல நாடுகளில் பொது மக்களின் தொடர்புகள் தடை செய்யப்பட்ட வேளையில், வத்திக்கான் வானொலி உண்மையை எடுத்துரைக்கும் ஒரே தொடர்பு சாதனமாக, ஐரோப்பிய மக்களுக்கு விளங்கவேண்டும் என்பதில், திருத்தந்தை 12-ஆம் பயஸ் அவர்கள் மிகவும் அக்கறை காட்டினார். போரில் ஈடுபட்டிருந்த வீரர்கள் தங்கள் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ளவும், அவர்களைப்பற்றிய தகவல்கள் வெளியாகவும் வழிவகுத்த வத்திக்கான் வானொலி, 1940-க்கும், 1946-க்கும் இடைப்பட்ட ஆறு ஆண்டுகளில், வீரர்களுக்கும், குடும்பங்களுக்கும் இடையே 1,240,728 தகவல்கள் பரிமாறப்படுவதற்கு உதவி செய்தது. இவ்வாறு, 'திருத்தந்தையின் குரலொலியாக' கடந்த 90 ஆண்டுகளில் வத்திக்கான் வானொலி ஆற்றி வந்துள்ள பணிகளை, அருள்பணி லொம்பார்டி அவர்கள் இக்கட்டுரையில் விரிவாகப் பதிவு செய்துள்ளார். தமிழ் ஒலிபரப்பு வத்திக்கான் வானொலியில், 1965-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் தேதி தமிழ் ஒலிபரப்பு ஆரம்பமானது. வாரத்திற்கு இரண்டு நாள்கள், பின்னர், வாரத்திற்கு நான்கு நாள்கள் என்று இடம்பெற்ற தமிழ் ஒலிபரப்பு, 1986-ஆம் ஆண்டு ஜனவரி 7-ஆம் தேதியன்று, தினசரி ஒலிபரப்பாக மாறியது என்பது நமக்கான இறைவனின் கொடை எனலாம்.

# காவிட்-19 பெருந்தொற்றை அரசியலாக்க வேண்டாம்

**வத்திக்கான்**: மலேசியாவில், கோவிட்-19 பெருந்தொற்றிலிருந்து மக்களைக் குணப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளிலும் ஊழல் தவிர்க்கப்படவேண்டும் என்று, அந்நாட்டு ஆயர்கள், நாட்டின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

கோவிட்-19 பெருந்தொற்று, அரசியலாக்கப்படுவதற்கோ, அல்லது, மலேசிய மக்களில் பிரிவினையை உருவாக்குவதற்கோ பயன்படுத்தப்படக் கூடாது என்றும், இந்நோயை ஒழிப்பதற்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் அனைவருக்கும் கிடைப்பதற்கு வழிசெய்யப்படவேண்டும் என்றும், மலேசிய ஆயர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நாட்டின் தலைவர்கள், மலேசியாவை நன்முறையில் நடத்திச் செல்லும் பொருட்டு, தங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைப் பின்னுக்குத்தள்ளி, மக்கள், மற்றும், நாட்டின் மீட்புக்குத் தங்களை அர்ப்பணிக்குமாறு, ஆயர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

"இறைமக்கள்" என்ற தலைப்பில், மலேசிய ஆயர் பேரவை வெளியிட்டுள்ள மேய்ப்புப் பணி அறிக்கையில், ஆயர்கள் இவ்வாறு நாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

கோவிட்-19 தடுப்பூசிகள் விநியோகிக் கப்படுவது மற்றும், பெருந்தொற்றை குணமாக்கும் முறைகளில், வெளிப்படைத்



ஆயர் மன்றத் தலைவர் பேராயர் ஜூலியன் லியாவ்

தன்மை தேவை என்றும், இவை தொடர்பாக, குடிமக்களுக்கு, தகவல் அறியும் உரிமை உள்ளது என்றும், ஆயர்களின் அறிக்கை கூறுகின்றது. (UCAN)

## தபக்காலத் தீர்மானங்கள்

### திருத்தந்தையின் பரிந்துரைகள்

- பிறரை புண்படுத்தும் வார்த்தைகளைத் தவிர்த்து விட்டு, அவர்களை ஆறுதல் படுத்தும் வார்த்தைகளால் நிரப்பு.
- உன்னை பீடித்திருக்கும் கவலையிலிருந்து விடுபட்டு, நன்றியுணர்வை உன்னில் ஏற்படுத்தி வாழ்.
- கோபத்தை உன்னிடமிருந்து இல்லாமலொழித்து, பொறுமையை கடைபிடித்து வாழ்.
- அவநம்பிக்கையை உன்னிடமிருந்து அகற்றிவிட்டு, நம்பிக்கை கொண்டவனாய் வாழ்.
- கவலைகளை உன்னிடமிருந்து அப்புறப்படுத்தி விட்டு, இறைவனில் முழு நம்பிக்கையுடையவனாய் வாழ்.
- குற்றம்சாட்டுவதை நிறுத்திவிட்டு, போதும் என்ற மனதோடு வாழ்.
- மனஅழுத்தங்களிலிருந்து விடுபட்டு, செபத்தினால் உன்னை நிரப்பி கொள்.
- கசப்பான அனுபவங்களை முழுமையாக மறந்து விட்டு, உனது இதயத்தை மகிழ்ச்சியினால் நிரப்பு.
- நான் என்ற சுயநல நிலையிலிருந்து விடுபட்டு, பிறர் மீது கருணையுள்ளம் கொண்டவனாய் வாழ்.

# மியன்மார் ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிரான போராட்டத்தில் துறவியர்

வத்திக்கான்: இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பை எதிர்த்து, யாங்கூன் நகரின் தெருக்களில், கத்தோலிக்க அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள் உட்பட, நூற்றுக்கணக்கான கத்தோலிக்கர், செபமாலையோடு இதர பல இறைவேண்டல்களையும் சொல்லிக்கொண்டு, பேரணி ஒன்றை நடத்தினர்.

கடந்த பிப்ரவரி 16, செவ்வாயன்று மிலான், வரேசே உள்ளிட்ட நகரங்களில், மியான்மார் நாட்டு அருள்பணியாளர்களும், அருள்சகோதரிகளும், பொதுநிலையினரும் கூடி, மியான்மாரில் இடம்பெற்றுள்ள ஆட்சிக்கவிழ்ப்புக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்ததோடு, அந்நாட்டில் அமைதியும் நீதியும் நிலைநாட்டப்படவும் செபித்தனர்.

மேலும், மியான்மாரின் மியிட்கினியா நகரில் போராட்டதாரர்கள் கலைந்துசெல்வ-தற்கென, பாதுகாப்புப் படைகள் துப்பாக்கிசூட்டைப் பயன்படுத்தியதை முன்னிட்டு, இந்த எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொள்ளும் கத்தோலிக்கரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது UCAN செய்தி கூறுகிறது.

உரோம் நகரில் வாழ்கின்ற மியான்மார் அருள்பணியாளர்கள், மற்றும், அந்நாட்டில், மக்களாட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்படவும், மக்களாட்சி



அருள்சகோதரிகளும், அந்நாட்டு இராணுவ அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளதோடு, நிலைநிறுத்தப்படவும், அமைதி நிலவவும் விண்ணப்பித்தனர்.

### மியான்மாரில் வன்முறை கைவிடப்பட ஐ.நா. வேண்டுகோள்

இதற்கிடையே, மியான்மாரின் முக்கிய நகரங்களின் தெருக்களில் இராணுவ வாகனங்கள் வலம்வருவதையொட்டி, அந்நாட்டு இராணுவத் தலைமை வன்முறையைக் கைவிடவேண்டும் என்றும், மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரம், சட்டம் ஒழுங்கு, ஆகியவற்றை மதிக்கவேண்டும் என்றும், மியான்மார் நாட்டுக்கென சிறப்பு ஐ.நா. தூதராகப் பணியாற்றும், கிறிஸ்தின் கரேனர் பர்க் கெனர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

மியான்மார் நாட்டின் நிலவரத்தை உலகம் மிகக் கவனமாக கண்காணித்து வருகிறது, எந்தவிதமான கடுமையான வன்முறைகள் பயன்படுத்தப்பட்டால், இதன் எதிர்விளைவுகளைச் சந்திக்கவேண்டியிருக்கும் என்று, அந்நாட்டு இராணுவத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார், கரேனர் பர்க் கெனர் (UN)

மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்

## கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் பேராயர் அலுவலக அறிக்கை

1. நடமாட்டக் கட்டுப்பாடு (MCO) நடப்பிலிருக்கும் வட்டாரங்களில் பொதுத் திருப்பலிகள் அடுத்த அறிவிப்பு வரை இன்னும் தடைசெய்யப்பட்டுள்ளன.

2. திருமுழுக்கு, திருமணம், புதுநன்மை மற்றும் உறுதிப்பூசுதல் ஆகிய அருளடையாளக் கொண்டாட்டங்கள் பங்குத்தந்தையர் அல்லது பங்கை நிர்வகிக்கும் அருள்தந்தையர் ஆகியோரின் ஆலோசனையின் பேரிலும், 15/2/2021-ல் இஸ்லாமியர் அல்லாதோருக்கு விதிக்கப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட செயல்முறை நெறிமுறைகளுக்கு ஏற்பவும் பங்கில் கொண்டாடப்படலாம்.
பங்குபெறும் மக்கள் எண்ணிக்கை 30 பேருக்கு மேல் இருக்கக்கூடாது. மேற்கூறப்பட்ட க் கொண்டாட்டங்கள் காலை 6.00 மணி முதல் பிற்பகல் 2.00 க்குள் கொண்டாடப் பட வேண்டும்.

3. கடந்த 2020-ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட உறுதிபூசுதல் கொண்டாட்டமானது, 25 வேட்பாளர் களுக்குக் குறைவாக இருந்தால், பேராயர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கொண்டாடத்திற்கான திகதியை உறுதிப் படுத்த வேண்டும்.

4. ஆர்.சி.ஐ.ஏ. ஆய்வுகளும் பேயோட்டும் சடங்குகளும் திருப்பலிக்குப் புறம்பே இடம்பெறலாம் 30 பேருக்கு மேற்போகாமல் ஓர் இடத்தில் ஒன்று கூடலாம். ஞானப்பெற்றோரைப் பிரதிநிதித்து ஒருவர் அனுமதிக்கப்படலாம்.

5.பங்கு அலுவலகங்கள் பங்குத் தந்தையின் முடிவுக்கு ஏற்ப செயல் படலாம்.

6.நிபந்தனைக்குட்பட்ட நடமாட்டக் கட்டுப்பாடுக்கு உட்பட்ட (CMCO) வட்டாரங்களிலுள்ள பங்குகளில் 19-02-2021-லிருந்து, விதிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்குக் கட்டுப்பாட்டு திருப் பலிகள் கொண்டாடப்படலாம்.

பேராயரின் அலுவலகம் தொடர்ந்து நிலைமையைக் காண்காணித்து இதர அறிக்கைகளை அவ்வப்போது வெளியிடும்.

**உரையாடல், மற்றும், திறந்தமனது வழியாக நற்செய்திக்கு சான்று பகர்வோம்.**

## இதுவே தகுந்த காலம், திரும்பி வருவோம்!

இவ்வருடத்தின் தவக்காலமும் அதன் மிகமுக்கியக் கருப்பொருளான மனமாற்றம் மற்றும் நற்செய்தியில் நம்பிக்கை வைப்பதைப் பற்றியும் சிந்திக்க நாம் அழைக்கப்படுகின்றோம். மனிதர்கள் தங்களின் வாழ்வில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு இடர்களை, குறிப்பாகச் சோதனைகளைச் சந்திப்பதுண்டு. அந்தக் கடினமான சூழல்களில் நாம் அவற்றை எதிர்த்துப் போராடுகின்றோமா அல்லது அச்சுழலில் சிக்கிக் காணாமல் போகின்றோமா என்பதைப் பற்றிச் சிந்ததிப்பது சாலச் சிறந்து.

இன்றைய முதல் வாசகத்தில் வெள்ளப் பெருக்கிலிருந்து காப்பாற்றப்பட்ட நோவா மற்றும் அவரின் புதல்வரிடம் தந்தையாகிய இறைவன் செய்துகொள்ளும் உடன்படிக்கையைப் பற்றி வாசிக்கின்றோம். உடன்படிக்கையின் அடையாளமாக வானவில்லை ஆண்டவர் வைத்தார். நோவா வாழ்ந்த காலத்தில் இருந்த மக்களில் நோவாவும் அவரின் குடும்பத்தார் மட்டுமே ஆண்டவரால் காப்பாற்றப்பட்டனர். நோவா பெட்டகத்தை செய்யும்போது, அவரை எள்ளிநகையாடி கேலி செய்த கூட்டத்தினர் வெள்ளத்தால் மாண்டு போயினர். சோதனைகளின் நடுவிலும் ஆண்டவரை முழுமையாக நம்பிய நோவா காப்பாற்றப்பட்டார். அவர் நேர்மையாளராகவும் கடவுள் முன் காணப்பட்டார். எனவே சோதனைகளை எதிர் கொள்ளும் போது, அவற்றிலிருந்து ஆண்டவர் யாரென்றும், நாம் அவர் மேல் கொண்ட நம்பிக்கை எவ்வளவு உயரியது என்றும் கண்டுணர முற்பட வேண்டும்.

இரண்டாம் வாசகத்தில் தண்ணீரிலிருந்து காப்பாற்றப்பட்ட நோவா குடும்பத்தினரைப் போல, இயேசுவால் நாமும் திருமுழுக்கினால் பாவத்திலிருந்து காப்பாற்றப்படுவதைப் பற்றி பேதுரு குறிப்பிடுகின்றார். கடவுளாயிருந்தும், மனிதராகப் பிறந்த இயேசு தம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற பொறுமையோடு இருந்ததால், அதிகாரங்கள், வல்லமைகளையெல்லாம் வெற்றிகொண்டு தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கிறார். எனவே சோதனைகளைப் போராடி வெல்லும் போதுதான் நம்முடைய பொறுமை எவ்வளவென்றும், இந்தப் பொறுமையினால் நாம் பெறப்போகும் விண்ணகப்பரிசு எவ்வளவு உயரியது என்றும் நம்மால் கண்டு உணரமுடியும்.

நற்செய்தி வாசகத்தில் இரண்டு நிகழ்வுகளை நாம் காண்கின்றோம். முதலில் இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனை. மற்றொன்று இயேசு தரும் மனமாற்றத்திற்கான அழைப்பு. சோதனைகள் அனைத்தும் நமக்கு விலைமதிப்பில்லாத அனுபவங்களைத் தருகின்றன. அந்த அனுபவங்களைப் படிக்கல்லாக எடுத்துக் கொண்டு வாழ்க்கையை மாற்றியமைத்தால், வாழ்வு உண்டு. அவற்றிலிருந்து எதுவுமே அனுபவப்படாமல் வாழ்ந்தோமானால், அச்சோதனைகளே நம்மை அழித்துவிடும். இயேசுவுக்கும் சோதனை வந்தது. திருமுழுக்குப் பெற்றவுடன் தூய ஆவியார் தான் அவரை பாலைநிலத்திற்கு கொண்டுசென்றார் என்று நாம் நற்செய்தியில் பார்க்கின்றோம். அங்கு அவர் பெற்ற இறையனுபவம் அவர் பின்னாளில் மனமுவந்து ஏற்றுக்கொள்ளப் போகும் அனைத்து துன்பங்களையும் எதிர்கொள்ள துணிவைத் தந்தது. அச்சோதனைகளை வெற்றிகொண்டதால், வானதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை புரிந்தார்கள். எனவே சோதனை வழி கிட்டும் இறையனுபவத்தின் வழி வாழ்வைத் துணிவோடு எதிர்கொண்டோமானால், தூய ஆவியாரின் வல்லமையும் கிட்டும்.

நான் பாவம் செய்தேன், அதை நினைத்து மனம் வருந்துகின்றேன் என்று முதல் முயற்சி எடுப்பதே மனமாற்றத்திற்கான முதல் படி. இத்தவக்காலத்தையும் இதற்கு முன்னர் வந்த ஆண்டுகளைப் போல தொடர்ந்து இறைவேண்டலிலும், தவத்திலும், தானத்திலும் சிறந்து விளங்க முயற்சிகள் எடுக்க திருஅவை அழைக்கிறது. இக்காலம், மன்னிப்பின் காலம், இறைவனின் தயவுக்காலம் என்பதை முழுமையாக உணர்ந்து மனம் மாற முன்வருவோம். அனைவரும் என் சகோதர சகோதரிகள் எனும் எண்ணம் மனதில் ஆழப்பதியவும், நம் உறவுப் பாதைகளைச் சீர்ப்படுத்தவும், எங்கெங்கு குறைகள் உள்ளதோ அவற்றை நிறைவு செய்யவும் இறைவனின் பரிவிரக்கத்திற்கு வேண்டுவோம்.

*-ஜொசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு**

தொ.நூல்: 9:8-15
திபா: 25: 4-5, 6-7, 8-9
1 பேதுரு: 3: 18-22
மாற்கு: 1: 12-15

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**

**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் I**